தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

செவ்வாய்கிழமை, 1979 மார்ச், 13-ம் நாள்

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுகியகால வினா எண் 12 திரு. சி. இராமநாதன்.

(மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: எழுந்திருக்கிறார்)

திரு. துரை முத்துசாமி: தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்திலேயே பாய்ன்ட் ஆப் ஆர்டர் என்ன?

திரு. துரை முத்துசாமி: இதே கேள்வியை நானும் கேட்டிருக்கிறேன், என்னுடைய பெயர் சொல்லப்படவில்லை என்று சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் வேறு ஏதோ கேள்வியைக் கேட்டிருக்கிறீர்கள்.

திரு. துரை முத்துசாமி: இல்லை, நான் இதற்கும் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, உங்கள் பெயரையும் சேர்த்துச் சொல்லிவிடுகிறேன். குறுகியக்காலக் கேள்வி எண் 12, திரு. சி. இராமநாதன், திரு. துரை முத்துசாமி.

நெய்வேலியில் கிடைக்கும் நிலத்தடி நீர்

குறுகிய கால வினா எண். 12

திரு. இ. சி. ராமநாதன் : திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விருத்தாசலம் தொகுதியில் நெய்வேலியில் வெட்டப்படும் இரண்டாவது சுரங்கத்தினால் வெளியேற்றப்படும் நிலத்தடி நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், அந்த நீரை திவளூர் விருத்தாசலம் அணைப் பகுதி விவசாயிகளுக்குப் பயன்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) நெய்வேலியில் இரண்டாவது கட்டமாக சுரங்கம் வெட்டப்படுவதால் கிடைக்கும் மொத்த நிலத்தடி நீர் அளவினை ஆய்ந்து, அதில் உபரியாகக் கிடைக்கும் தண்ணீரைப் பாசனம் மற்றும் சென்னை நகரக் குடிநீர் தேவைகளுக்கு முழு அளவில் பயன்படுத்தும் சாத்தியக் கூறுகள் பற்றி தமிழக அரசுக்கு அறிவிக்கும் பொருட்டு ஒரு நிபுணர் குழு அமைக்கப்பட்டது, அக்குழு அதனுடைய விரிவான அறிக்கையினை அரசுக்கு 1978-ம் ஆண்டு நவம்பர் திங்களில் அனுப்பியுள்ளது. அந்த அறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்குப் பயன்படுத்தப்படுகிற வகையிலே அந்தத் தண்ணீர் பயன்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, பாசன வசதிக்காகவும், குடிநீர் தேவைகளுக்குப் பயன்படுத்துவதற்காகவும் அதனை ஆராய்வதற்கு அந்தக் குழு அமைக்கப்பட்டு, அது அறிக்கை கொடுத்துள்ளது. அது அரசினுடைய பரிசீலனையில் உள்ளது.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாம் கட்ட சுரங்கம் வெட்டும்போது வெளிப்படக் கூடிய நிலத்தடி நீரை நல்ல முறையில் பயன்படுத்துவது சம்பந்தமாக அந்தக்குழு ஏதாவது அறிக்கை கொடுத்துள்ளதா? அதைப் பயன்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது, திட்டம் அரசின் ஆய்வில் இருக்கிறது.

TAMIL NADU LEGISLATURE LIBRARY
4-DEC 1979
MADRAS

[1979 மார்ச் 13]

திரு. க. மருதாசலம்: தலைவர் அவர்களே, அந்தத் திட்டத்திற்காக நிபுணர் குழு அமைக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தக் குழு எப்பொழுது அமைக்கப்பட்டது? அந்தக் குழுவிலே யார் யார் இடம் பெற்றிருக்கிறார்கள்? அந்த வேலைத் திட்டத்தின் மதிப்பீடு என்ன என்பதையெல்லாம் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குழு ஏற்கனவே 1978 மார்ச் மாதத்திலே அமைக்கப்பட்டது. அதனுடைய அறிக்கை கடந்த 1978 நவம்பர் மாதத்திலேயே கொடுக்கப்பெற்றிருக்கிறது, அந்த அறிக்கை அரசின் ஆய்வில் இருக்கிறது. இதனால் கிடைக்கும் தண்ணீரைப் பயன்படுத்தலாம் என்கிற ஆய்வை அரசு எடுத்துக்கொண்டு ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது. இதற்கான மதிப்பீடுகள் இவ்வறிக்கையில் இல்லை.

திரு. சி. கோவிந்தராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி, நெய்வேலியில் வெட்டப்படும் இரண்டாவது சுரங்கத்தில் வெளியேற்றப்படும் நிலத்தடி நீரைப் பாசனத்திற்கு உபயோகப்படுத்துவதற்கு உத்தேசம் ஏதும் அரசுக்கு உண்டா என்பது. ஆனால், அமைச்சர் அவர்கள் பதில் கூறும் போது சென்னை நகரக் குடிநீர் தேவைகளுக்குப் பயன்படுத்தும் பரிசீலனையும் உள்ளது என்று கூறியிருக்கிறார்கள். முதல் விஷயம், அந்த நீரைப் பாசனத்திற்கு பயன்படுத்துவதாக இருந்தால் எந்தெந்த இடங்களுக்கு எவ்வளவு கிடைக்கும்? பண்ருட்டி, கடலூர் தாலுக்காக்களுக்கும் கொண்டுபோகப்படுமா? இரண்டாவது, குடிநீர் என்று வரும்போது சுரங்கம் வெட்டப்படுவதால் கிடைக்கும் நிலத்தடி நீரில் 'சிலிக்கா' என்று சொல்லப்படுகிற இராசாயனப் பொருள் இருப்பதாகவும், அந்த நீரைக் குடித்தால் வயிற்றுநோய் ஏற்படுவதாகவும் சொல்கிறார்கள். எனவே பாசனத்திற்கு மட்டும் பயன்படுத்திக் கொண்டு, சென்னைக்கு இந்த நீரைக் கொண்டு வரும் திட்டத்தைத் தடை செய்தால் நலமாக இருக்கும் என்பதை அரசு ஆராயுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டாவது சுரங்கம் வெட்டப்படுவதன் மூலமாகக் கிடைக்கக்கூடிய தண்ணீர் பாசன வசதிக்கு மட்டும் இல்லாமல் சிறு தொழில்கள் ஆரம்பிப்பதற்கு, தொழிற்சாலைகளுக்கு வேண்டிய தண்ணீர் கிடைக்க முடியும். அதே நேரத்தில் எவ்வளவு தண்ணீர் கிடைக்கக்கூடும் என்று துல்லியமாகக் கணக்கிட்டு தற்போது அறிய முடியாது என்று இதன் ஆய்வுக்குழுவின் அறிக்கையில் கொடுத்திருக்கிறார்கள். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல அந்த தண்ணீரில் சிலிக்கா என்ற இரசாயனப் பொருள் இருப்பதாக நிபுணர் குழு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும், தண்ணீரைக் குடிநீருக்காக

அனுப்பும் போது அதனைப் பாதுகாக்கப்பட்ட தண்ணீராகத்தான் (புரொடெக்டட் வாட்டர்) கொடுக்கவிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தீயணைப்புப் பணிகளுக்குப் புதிய வாகனம்

* வினா எண். 360.— திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) தீயணைப்புப் பணிகளுக்காக சுமார் 18 லட்சம் ரூபாயில் ஒரு வண்டி வாங்க உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இதனை புனர் ஆலோசனை செய்ய உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) சென்னை மாநகருக்குப் பயன்படுவதற்காக சிறப்பு வகை தீயணைப்பு வண்டியை, அதாவது, '' ஸ்னோர்கல் '' தீயணைப்பு வண்டியை புதுடில்லி. பொருள் வழங்கல்— விற்பனைத் தலைமை இயக்குநர் அலுவலகத்தின் மூலமாக வாங்குவதற்காக தீயணைப்புத்துறை இயக்குநர் அனுப்பிய செயற்குறிப்பை அரசு ஏற்றுக்கொண டுள்ளது.

(ஆ) இதனை மறுபரிசிலனை செய்யும் கருத்து ஏதும் இல்லை.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : தலைவரவர்களே, என்னுடைய நத்தம் தொகுதியில் உள்ள சாணார்பட்டி, கொட்டாம்பட்டி யூனியன்களில் தீயணைப்புப் பணிகளைத் தீவிரமாகச் செய்யப் போதிய வசதிகள் தற்போது இல்லை. ஆகையால் அங்கே இன்னொரு தீ அணைப்பு வண்டி வாங்கிக் கொடுக்க அரசு முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்த 'ஸ்னோர்கல்' தீ அணைப்பு எஞ்சின் பல மாடிக் கட்டடங்களில் தீ பிடித்தால் அணைக்கப் பயன்படுத்தப்படு வதாகும். இந்த எஞ்சினை வெளிநாட்டிலிருந்து, குறிப்பாக இங்கிலாந்தில் இருந்து இறக்குமதி செய்ய மத்திய சர்க்காரை அனுமதி கேட்டிருக்கிறோம். இந்த மாதிரியான தீ அணைப்பு எஞ்சின் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடங் களுக்குத் தேவைப்படாது. அங்கு தீ அணைப்பு நிலையம் அமைக்க அரசு தனியாகக் கவனிக்கும்.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : அங்கே தீ அணைப்பு நிலையம் இப்போது இருக்கிறது. இன்னொரு தீ அணைப்பு வண்டி வாங்குவதுபற்றி கேட்டேன்.